OS No.151/2024

PW-1 –மீனாட்சி

த/பெ.

நாள். 13.02.2026

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1.வழக்கினை பிரதிவாதியை காலி செய்வதற்காக போட்டிருக்கிறேன் பிரதிவாதி என் வீட்டில் குடியிருக்கிறார். பரமசிவம் என்பவருக்கு நான்கு பேர் வாரிசுதாரர்கள். பரமசிவமும் கோபாலும் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். மூத்தவர் கோபால். என்னுடைய வழக்கிலும் பிரமாண பத்திரிக்கையிலும் கதவு எண். 9 என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் இருக்கலாம்.

2.மேற்சொன்ன முகவரியை காட்டுவதற்கு ஆதார் கார்டு நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். மற்ற வாதிகளுக்கும் இதே முகவரியில் ஆதார் கார்டு இருக்கிறதா என்று கேட்டால் ஆதார் கார்டு தாக்கல் செய்திருக்கிறோம் ஆனால் அதில் முகவரியில் கதவு எண் வெவ்வேறாகத்தான் இருக்கிறது. பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய தகப்பனாருக்கு கொடுத்த ஹெச்.எஸ்.டி பட்டா 744 சதுர அடிக்கு என்று சொன்னால் எனக்கு சதுர அடி அளவெல்லாம் தெரியாது. பட்டா நம்பர் தெரியுமா என்றால் தெரியாது.

3.பரமசிவம் 2003–இல் இறந்து போனதாக பிரமான வாக்குமூலத்தில் சொல்லி இருக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். பரமசிவம் இறந்து போன பின்பு அவருடைய கடைசி காரியங்கள் அனைத்தும் கதவு நம்பர் 7–ல் தான் நடந்தது. இறப்பு சான்றிதழ் கதவு எண் ஒன்பதில் கொடுக்கப்பட்டிருந்தால் அது தவறான கதவு எண் என்று சொன்னால் சரியல்ல.

4. அதேபோல் வாரிசு சான்றிதழிலும் கதவு எண் ஏழு என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் வீட்டு வாரிய ரசீது

நீதிமன்றத்தில் ஆவணப்படுத்தி இருக்கிறேன் அந்த வீட்டு வரி ரசீதிலும் கதவு எண் 9 என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் கதவு எண்.ஏழு தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

5.என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் தாவா வீட்டுல இருக்கும் சொத்திற்கு வாடகை பெற்றுக் கொண்டிருந்தாரா என்று கேட்டால் அப்போதும் நாங்கள்தான் வாடகையை வாங்கிக் கொண்டிருந்தோம். தற்போது பிரமான பத்திரிக்கையில் குறிப்பிட்டிருக்கும் முகவரியில் நான் குடியிருக்க வில்லை என் மகனுடன் கல்லாங்காடு வீட்டில் குடியிருக்கிறேன். வாடகை ஒப்பந்தம் பத்திரம் போடப்பட்டுளளதா என்றால் இல்லை. வாடகையை கணக்கில் செலுத்துகிறார்கள் அல்லது கையில் கொடுக்கிறார்களா என்பதற்கு என்ன ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6.என் பெரியப்பா இறந்து போய்விட்டார் வருடம் ஞாபகம் இல்லை அவருக்கு 6 நபர்கள் வாரிசுகள். ஏழாம் நம்பர் வீட்டில் தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் ஒன்பதாம் நம்பர் வீட்டில் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது.

7.என்னுடைய அசல் வழக்கில் யார் வாடகை வாங்கி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. தாவா சொத்தில் இருக்கும் வீட்டிற்கு யார் பெயரில் மின் இணைப்பு இருக்கிறது என்று நான் குறிப்பிட்ட என்னுடைய வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கிழபுரத்தில் யாருடைய சொத்து என்று கேட்டால் எங்களுக்கு சொந்தமான சொத்து மேற்கு புறத்தில் கோபாலுக்கு சொந்தமான சொத்து. வாடகைக்கு விடப்பட்டிருக்கும் வீட்டில் இரண்டு ரூம்கள் இருக்கிறது. வழக்கு சொத்தில் நாங்கள் தான் வீடு கட்டி இருக்கிறோம், கோபால் வீடு கட்டவில்லை. வழக்கு சொத்தில் வீடு கட்டியிருப்பது அனைத்தும் ஒப்பாரி வாரிசுகள் தான் என்றும் நாங்கள் எந்த வீடும் கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வாடகை வாங்கியதாக சொல்வதும் தாவாசொத்தில் வாடகைக்கு இருக்கிறார்கள் என்றும் சொன்னதும் வழக்குக்காக பொய்யான சாட்சி என்று சொன்னால் சரி அல்ல.

8.என்னுடைய முழு சம்மதத்தின் பெயரில்தான் பிரதிவாதிகள் வீடு கட்டி அதில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. ராஜி என்ற நபர் என் வீட்டில் குடியிருப்பதாக சொல்லிய போதும் அது தவறு என்றும் அதில் இரண்டுவேற நபர்கள் தான் குடியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு போட்ட முகவரி மற்றும் நான் குடியிருக்கும் முகவரி எல்லாம் ஒன்பதாம் நம்பர் வீடு என்று தான் குறிப்பிட்டு சொல்லி இருந்த போதிலும் நான் ஏழு என்று வழக்கிற்காக பொய்யாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.